**செய்தி வெளியீடு எண்:648** **நாள்: 02.10.2017**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள் விழாவினை சென்னை குறளகம் கதர் அங்காடியில் ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடி வருகிறது. அவ்வகையில் இவ்வாண்டும் **அண்ணல் காந்தியடிகளின் 149–வது பிறந்த நாள் விழா இன்று ( 02.10.2017 ) சென்னை கதர் அங்காடியில்** கொண்டாடப்பட்டது.

அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாள் **விழாவில் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு.டி.ஜெயக்குமார் அவர்கள்** கலந்து கொண்டு அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து கதர் சிறப்பு விற்பனையைத் துவக்கி வைத்தும் பட்டு நெசவில் சிறப்பாக வடிவமைத்த நெசவாளர்களுக்கு பரிசுகள் வழங்கியும் சிறப்பித்தார்கள். **மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா.பென்ஜமின் அவர்கள்** சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு கதராடை அணிவித்து கௌரவித்தார்கள். விழாவில் **வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஜி. வெங்கடேஷ் பாபு** அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

தீபாவளி சிறப்பு விற்பனை அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளான 02.10.2017 முதல் தொடங்கி நடைபெறுகிறது. கடந்த ஆண்டு 20.63 கோடி ரூபாய் மதிப்பிலான கதர் இரகங்களை விற்பனை செய்த தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் நடப்பு ஆண்டில் ரூ.21.50 கோடி மதிப்பிலான கதர் இரகங்களை விற்பனை செய்திட திட்டமிட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் 90 கதர் அங்காடிகளுடன் 98 தற்காலிக கதர் அங்காடிகளும் அமைக்கப்பட்டு இச் சிறப்பு விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டு மக்கள் பயனடையும் வகையில், வாரியத்தின் நேரடி உற்பத்தி நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட தரமான கதர் பருத்தி, கதர் பட்டு, மற்றும் கதர் பாலியஸ்டர் இரகங்களை கதர் அங்காடிகள் மற்றும் தற்காலிக கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அண்ணல் காந்தியடிகளின் 149 வது பிறந்த நாள் விழா மற்றும் தீபாவளி கதர் சிறப்பு விற்பனை தொடக்க விழாவில், கதர் கிராமத் தொழில் வாரிய அலுவலர்கள், பணியாளர்கள், அரசு அலுவலர்கள், சுதந்திர போராட்ட தியாகிகள், கைவினைஞர்கள், பொது மக்கள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இவ்விழாவிற்கு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**